மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையைப் பரிசீலிக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களில் இன்றையதினம் சிறு விவசாயிகளுக்குக் கடன் தரப்படுகிறது. அதிலே இப்பொழுது மாடு அல்லது வண்டி வாங்குவதற்குக்கூட கடன் தருகிறார்கள். 10 அல்லது 11 கிராமங்கள் அடங்கியுள்ள கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் 10 பேர் 5 பேர்களுக்குத்தான் தருகிறார்கள். அதனால் ஏகப்பட்ட தகராறுகள் வருகின்றன. எனவே, இப்படிப்பட்ட கடன் தொகைகளை அதிகப்படுத்தி விவசாயிகளுக்கு உதவ அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, எந்தப் புதிய முறைகளை வகுத்து அவற்றைக் கடைப்பிடிப்பதாக இருந்தாலும் விவசாயிகளுக்கு அது உண்மையிலேயே நன்மை தரத்தக்க திட்டங்களாக இருக்குமேயானல் இந்த அரசு நிச்சயமாக அதைப் பரிசீலிக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, சமீபத்தில் பீகார் மாநில அரசு விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் கொடுக்கப்பட்ட கடன்களுக்கான வட்டியை ரத்து செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலும் வெள்ளம், வறட்சியாலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய கடன் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த அரசு அந்தக் கடன்களுக்கான வட்டியை ரத்து செய்வதற்கு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அசலையோ அல்லது வட்டியையோ ரத்து செய்வதற்குண்டான அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள்.

புதிய பல்கலைக் கழகங்கள்

*756 வினு—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையான 30 முதல் 40 கல்லூரிகளை மட்டும் கொண்ட பல்கலைக்கழகங்கள் இயங்க வேண்டுமென்ற ஆலோசனையை அரசு ஏற்றுக்கொண்டதா?

(ஆ) ஆம் எனில் தமிழகத்தில் இன்னும் எத்தனை பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கபடும்!

1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) திருச்சி, மற்றும் கோவையில் உள்ள சென்னை பல்கலைக் கழக பட்ட மேற்படிப்பு மையங்களைப் பல்கலைக் கழகங்களாக மாற்றி அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இந்த கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையில் 30 முதல் 40 கல்லூரிகளை மட்டும் கொண்டிருக்கும் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க வேண்டு மென்று இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மருத்துவக் கல்லூரிகளை ஒன்று சேர்த்து மருத்துவப் பல்கலைக் கழகம் என்று ஏற்படுத்த அரசு முன் வருமா? அதற்கான திட்டங்களை அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் தொடங்க இருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நன்றி. அப்படித் திருச்சியிலே பல்கலைக் கழகத்தை உருவாக்குகின்ற நேரத்தில் திருச்சி நகரத்திலே உள்ள கல்லூரிகளை மட்டும் இணைக் காமல், திருச்சி, தஞ்சாவூர், தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளையும் இணைக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, திருச்சி பல்கலைக் கழகத்தில், திருச்சி, தஞ்சை புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 37 கல்லூரிகளை இணைப்பதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. காளியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் வள்ளல் அழகப்ப செட்டியார் அவர் கள் ஏராளமான கல்லூரிகளை அங்கே நிறுவிவிட்டுச் சென்றிருக்கிறார் கள். கட்டிடங்களையெல்லாம் அதற்காகவும் கட்டிவிட்டுச் சென்றி ருக்கிறார்கள். காரைக்குடி வட்டார மக்களும் அதைப் பல்கலைக்கழக மாக ஆக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாக அரசைக் கோரி வரு கிறார்கள். ஆகவே அங்கு அப்படி பல்கலைக்கழகம் ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதற்கான கருத்து இப்பொழுது பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். கோவை பல்கலைக் கழகத்தில் எந்தெந்த மாவட்டங்களிலிருக்கிற கல்லூரிகள் இணைக்கப்படும் என்று சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கோவை பல்கலைக் கழகத்தில், கோவை, நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள 44 கல்லூரிகளை இணைக்க வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, தொடங்க இருக்கிற இரண்டு பல்கலைக் கழகங்களுக்கும் என்ன பெயர் வைக்கப்படும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி முடிவு செய்யப்படவில்லையென்றால் திருச்சியிலே அமைக்கவிருக்கும் பல்கலைக் கழகத்திற்குப் பெரியார் பல்கலைக் கழகம் என்றும் கோவையிலே அமைக்கவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு அண்ணா பல்கலைக் கழகம் என்றும் பெயர் வைக்க இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பல்கலைக் கழகங்களை உருவாக்குவதற்கான நிலைமைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. அதற்குப் பிறகு, அதைப்பற்றி நாம் ஆலோசனை செய்யலாம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, தென்னாட்டு 'கேம் பிரிட்ஜ்' என்று சொல்லப்படுகிற பாளையங்கோட்டையில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, திருச்சி, கோவை பல்கலைக் கழகங்களே இன்னும் முழு அளவில் உருப்பெறாமல் இருக்கும் நிலைமையில் பாளையங்கோட்டையைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவரவர்களே, திருச்சியிலே மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதாக சில வருஷங்களுக்கு முன்னால் சொன்னார்கள். இந்தப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் மருத்துவ கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.